# தாம்பரம் பெரு நகராட்சி

## 2009–2010 ஆம் ஆண்டின் நிர்வாக ஆட்சி அறிக்கை

### 1.1 அமைப்பும், மேலாண்மையும்

இவ்வறிக்கை இப்பெரு நகராட்சியின் 43–வது நிர்வாக ஆட்சி அறிக்கையாகும்.

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரத்தின் பிரதான வாயிலாக ஜி.எஸ்.டி. (Grand Sounthern Trunk Road) சாலையில் 24 கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரம் பெரு நகரம் அமையப்பெற்றுள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு சென்ற ஆண்டில் இருந்தது போலவே பெருக்கமின்றி 20.72 சதுர கிலோ மீட்டர் கொண்டதாக இருந்து வருகிறது. இந்நகராட்சியின் நிலை விபரம் பின்வருமாறு.

| வ. எண் | அரசு ஆணை எண் | நாள் | நிலை |
|---|---|---|---|
| 1 | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண்.489 நாள் 25.02.1964 | 01.04.1964 | மூன்று |
| 2 | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண்.194 நாள் 10.02.1970 | 10.02.1970 | இரண்டு |
| 3 | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண்.1648 நாள் 01.4.1976 | 01.04.1976 | முதல் |
| 4 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.85 நாள் 22.05.1998 | 22.05.1998 | தேர்வு |
| 5 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண் 238 நாள் 2.12.2008 | 02.12.2008 | பெரு |

### 1.2. ஆட்சி வரம்பு

பழைய தாம்பரம், கடப்பேரி, புலிக்கொரடு, இரும்புலியூர் சேலையூர் வருவாய் கிராமங்களில் தென்னக ரயில்வே ஊழியர்கள் குடியிருப்பு இந்திய விமானப் படையைச் சார்ந்த இடங்கள் நீங்கலாக உள்ள பகுதிகள் இந்நகராட்சியின் அதிகார வரம்புக்கு உட்பட்டவையாகும்.

### 1.3. மக்கள் தொகை

இப்.பெரு நகராட்சியின் உத்தேச மக்கள் தொகை சுமார் 1.75 லட்சமாகும். இருப்பினும் அன்றாடம் இந் நகரத்திற்கு வந்து செல்லும் மக்கள் தொகை சராசரியாக 5.00 லட்சம் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது

| வ.எண். | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1 | 1981 – ல் மக்கள் தொகை கணக்கெடுப்பு படி | 86,933 |
| 2 | 1991 – ல் மக்கள் தொகை கணக்கெடுப்பு படி | 1,07,187 |
| 3 | 2001 – ல் மக்கள் தொகை கணக்கெடுப்பு படி | 137,933 |

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2001 –ன் படி வார்டு வாரியான மக்கள் தொகை விபரம்

| வார்டு எண் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 1954 | 1963 | 3917 |
| 2 | 1825 | 1727 | 3552 |
| 3 | 1396 | 1302 | 2698 |
| 4 | 1390 | 1375 | 2765 |
| 5 | 1590 | 1594 | 3184 |

| வார்டு எண் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6 | 1292 | 1252 | 2544 |
| 7 | 1637 | 1548 | 3185 |
| 8 | 1528 | 1480 | 3008 |
| 9 | 1424 | 1398 | 2822 |
| 10 | 1107 | 1034 | 2141 |
| 11 | 1456 | 1485 | 2941 |
| 12 | 1082 | 1062 | 2144 |
| 13 | 1590 | 1516 | 3106 |
| 14 | 1111 | 1132 | 2243 |
| 15 | 1461 | 1466 | 2927 |
| 16 | 1665 | 1708 | 3373 |
| 17 | 2035 | 2052 | 4087 |
| 18 | 3314 | 3133 | 6447 |
| 19 | 2091 | 2060 | 4151 |
| 20 | 1729 | 1775 | 3504 |
| 21 | 1967 | 1966 | 3933 |
| 22 | 2033 | 1920 | 3953 |
| 23 | 4585 | 3766 | 8351 |
| 24 | 1020 | 1111 | 2131 |
| 25 | 1343 | 1237 | 2580 |
| 26 | 1628 | 1582 | 3210 |
| 27 | 3281 | 3131 | 6412 |
| 28 | 1519 | 1405 | 2924 |
| 29 | 2363 | 2157 | 4520 |
| 30 | 1676 | 1611 | 3287 |
| 31 | 1161 | 1109 | 2270 |
| 32 | 3049 | 2782 | 5831 |
| 33 | 2228 | 2236 | 4464 |
| 34 | 1758 | 1661 | 3419 |
| 35 | 467 | 429 | 896 |
| 36 | 919 | 754 | 1673 |
| 37 | 2010 | 1973 | 3982 |
| 38 | 3133 | 3093 | 6226 |
| 39 | 1603 | 1529 | 3132 |
| மொத்தம் | 70419 | 67514 | 137933 |

அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் - 17
அறிவிக்கப்படாத குடிசைப்பகுதிகள் - 7
குடிசைப்பகுதி மக்கள் தொகை விபரம்
அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் - 30840
அறிவிக்கப்படாத குடிசைப்பகுதிகள் - 8350
வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் - 9171
மொத்த குடியிருப்புகள் - 26333

## மக்கள் தொகை கணக்கெடுப்பு 2001–ன் படியான விபரங்கள்

| விபரம் | மொத்தம் | ஆண் | பெண் | சதவிகிதம் | அளவு விகிதம் |
|---|---|---|---|---|---|
| மக்கள் தொகை | 137933 | 70419 | 67514 | 100 | 959 |
| மக்கள் தொகை 0–6 | 15133 | 7701 | 7432 | 12,32 | 965 |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 18705 | 9308 | 9397 | 13.56 | 1010 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் | 1282 | 653 | 629 | 0.93 | 963 |
| படித்தவர்கள் | 106833 | 57692 | 49141 | 87 | 852 |
| படிக்காதவர்கள் | 31100 | 12727 | 18373 | 13 | 1444 |
| பணியாளர்கள் | 46730 | 37623 | 9107 | 33.88 | 242 |
| முதன்மை பணியாளர்கள் | 43966 | 35710 | 8256 | 31..87 | 231 |
| முதன்மை பயிருடுவோர் | 161 | 105 | 56 | 0.37 | 533 |
| முதன்மை விவசாய தொழில் புரிவோர் | 196 | 163 | 33 | 0.45 | 832 |
| வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிப்போர் | 499 | 295 | 204 | 1.13 | 692 |

# 2. நகராட்சி நிர்வாகம்

## 2.1 நகரமன்ற தலைவர்

அறிக்கையாண்டில் நகரமன்ற தலைவராக திரு MJF லயன் E.மணி அவர்கள் பொறுப்பில் இருந்து வருகிறார்.

## 2.2 துணைத் தலைவர்

நகரமன்ற துணைத் தலைவராக திரு.து.காமராஜ், அவர்கள் பொறுப்பில் இருந்து வருகிறார்.

நகரமன்ற உறுப்பினர்களின் விவரப்பட்டியல்

| வ.எண். | உறுப்பினர் பெயர் திருவாளர்கள் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | ஏ.கோபிநாதன் | 1 |
| 2 | எல்லார். செழியன் | 2 |
| 3 | கே.சம்பத்குமார் | 3 |
| 4 | வெஸ்டர்ன் வீரசிங் | 4 |
| 5 | சசிதேவி சுரேஷ் | 5 |
| 6 | ஆர்.செல்வகுமார் | 6 |
| 7 | எம்.கே. நாகூர்கனி | 7 |
| 8 | டி.ஜான் கென்னடி | 8 |
| 9 | சாராள் தர்மராஜ் | 9 |
| 10 | இ.வி.சம்பத் | 10 |
| 11 | டி.கே.எம்.சின்னையா | 11 |
| 12 | கே.ஹரிஹரன் | 12 |
| 13 | ர.புருஷோத்தமன் | 13 |
| 14 | நிர்மலா முனுசாமி | 14 |
| 15 | கே.மனோகர் | 15 |
| 16 | ஷீலா பிரபாகரன் | 16 |
| 17 | சி.சாய் கணேஷ் | 17 |

| வ.எண். | உறுப்பினர் பெயர் திருவாளர்கள் | வார்டு எண் |
|---|---|---|
| 18 | ஆர்.தாமோதரன் | 18 |
| 19 | புவனேஸ்வரி சினிவாச குமார் | 19 |
| 20 | ஆ.ஜானகிராமன் | 20 |
| 21 | டி.வி.ரங்கநாதன் | 21 |
| 22 | MJF லயன் E.மணி (நகரமன்றத் தலைவர்) | 22 |
| 23 | ஏ.அப்துல் மசீத் | 23 |
| 24 | கலைச்செல்வி ஜோதிகுமார் | 24 |
| 25 | கி.வேல்மணி | 25 |
| 26 | எஸ்.இந்திரன் | 26 |
| 27 | தனம் மாணிக்கம் | 27 |
| 28 | இரா.ரத்தினகுமார் | 28 |
| 29 | வி.என்.வேணுகோபால் | 29 |
| 30 | மல்லிகா கன்னியப்பன் | 30 |
| 31 | தேவகி கோபி | 31 |
| 32 | டி.வி. இராமமூர்த்தி | 32 |
| 33 | வாசுகி ரவிக்குமார் | 33 |
| 34 | மா.செழியன் | 34 |
| 35 | கோ.இராசேந்திரன் | 35 |
| 36 | து.காமராஜ் (நகரமன்றத் துணைத் தலைவர்) | 36 |
| 37 | தனலட்சுமி நடராஜன் | 37 |
| 38 | மல்லிகா ராஜேந்திரன் | 38 |
| 39 | வி.கே. ரகுபதி | 39 |

## 2.3. தேர்தல்கள்

அரசாணை எண்.135 நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 11.6.1996–ல் 1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் 39 வார்டுகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டு உள்ளது.

| வ.எண் | ஓதுக்கீட்டின் விவரம் | வார்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெண்களுக்கு பொதுவானது | 11 |
| 2 | தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு | 2 |
| 3 | தாழ்த்தப்பட்டவர்களுக்கு | 3 |
| 4 | பொதுவானது | 23 |
| | மொத்தம் | 39 |

இந்நகராட்சியில் நகரமன்ற தலைவர் மற்றும் 39 வார்டு உறுப்பினர்களுக்கு 10.10.2006 தேர்தல் நடைபெற்று 25.10.2006 முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் 25.10.2006 பதவியில் ஏற்றுக் கொண்டனர். நகரமன்றம் தொடர்ந்து செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

## 3. கூட்டங்கள்

அறிக்கையாண்டில் நகரமன்றத்தின் 12 சாதாரண கூட்டங்களும் 4 அவசர கூட்டங்களும், நடைபெற்றன. கூட்டங்களில் அலுவல்கள் முறையாக நடைபெற்றன. நகரமன்ற கூட்டங்களில் விதிகளுக்குட்பட்டு முறையான அலுவல்கள் கடைபிடிக்கப்பட்டன.

## 4. குழுக்கள்

கீழ்கண்ட குழுக்கள் இந்நகராட்சியில் அமைக்கப்பட்டு அறிக்கையாண்டில் தொடர்ந்து உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

### 4.1 வரிவிதிப்பு மேல்முறையிட்டுக் குழு.

| வ. எண் | உறுப்பினர் பெயர் திருவாளர்கள் | வா.எண். | கட்சி | தேர்தல் நடைபெற்ற நாள் |
|---|---|---|---|---|
| 1 | ஷீலா பிரபாகரன் | 16 | காங்கிரஸ் | 16.10.2006 |
| 2 | வெஸ்டர்ன் வீரசிங் | 4 | தி.மு.க | 16.10.2006 |
| 3 | கோ.சம்பத்குமார் | 3 | பா.ம.க. | 16.10.2006 |
| 4 | மா.செழியன் | 34 | ம.திமு.க | 16.10.2006 |

அறிக்கையாண்டில் வரி விதிப்பு மேல்முறையீட்டுக் குழு கூட்டம் நடைபெற தேவை ஏற்படவில்லை.

### 4.2 நியமனக் குழு

| வ. எண் | உறுப்பினர் பெயர் | வா.எண். | கட்சி | தேர்தல் நடைபெற்ற நாள் |
|---|---|---|---|---|
| 1 | திருமதிமல்லிகா கன்னியப்பன் | 30 | தி.மு.க. | 16.10.2006 |

அறிக்கையாண்டில் இரண்டு நியமனக்குழு கூட்டம் நடைபெற்றது.

### 4.3. ஒப்பந்தக்குழு

| வ. எண் | உறுப்பினர் பெயர் | வா.எண். | கட்சி | தேர்தல் நடைபெற்ற நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.இந்திரன் | 26 | தி.மு.க | 16.10.2006 |

## 5. ஆணையாளர்

அறிக்கையாண்டில் திருமதி.எல்.எஸ்.கிரிஜா அவர்கள் ஆணையராக 20.07.2009 பிற்பகல் வரையும் **திருமதி என்.எஸ்.பிரேமா, எம்.ஏ., பி.எட்.,** அவர்கள் 20.07.2009 பிற்பகல் முதல் அறிக்கையாண்டின் இறுதி வரையும் பணியாற்றி வருகிறார்கள்.

## 6. மேலாளர் மற்றும் கணக்கர்

அறிக்கையாண்டில் திரு. தா.மோகன்ராஜ் அவர்கள் மேலாளராக 04.12.2009 வரையும் 04.12.2009 முதல் 07.02.2010 வரை திரு.க.லோகநாதன் கணக்கர் கூடுதல் பொறுப்பும் 08.02.2010 முதல் 31.03.2010 வரை திரு. சு.முருகேசன் அவர்களும் மேலாளராக பணியாற்றி வருகிறார்கள். கணக்கராக திரு.க..லோகநாதன் அவர்கள் அறிக்கையாண்டின் இறுதி வரையும் பணிபுரிந்துள்ளனர்.

## 7. பணியமைப்பு செலவினங்கள்

பொதுப்பணியாளர்கள், வருவாய் உதவியாளர்கள். பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள் சுகாதார பணியாளர்கள் அவர்களுக்கு செலுத்தப்படும் பணியமைப்புச் செலவு இவ்வாண்டில் ரூ.593.74 லட்சம் ஆக இருந்தது. சென்ற ஆண்டின் செலவு ரூ.469.03 லட்சம் ஆகும்

## 8. வழக்குகள்

அறிக்கையாண்டில் வழக்குகளுக்காக ரூ. 5.54 லட்சம் மட்டுமே செலவழிக்கப்பட்டது. நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்.

| வ.எண். | இனம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 120 |
| 2 | கட்டிடம் | 30 |
| 3 | கடைகள் குத்தகை | 1 |
| 4 | நிர்வாகம் | 1 |
| | மொத்தம் | 152 |

## 9, எழுது பொருட்கள்

இத்தலைப்பின் கீழ் ரூ.11.47 லட்சம் மட்டும் செலவழிக்கப்பட்டது. சென்ற ஆண்டு ரூ.10.99 லட்சம் ஆகும். கணிப்பொறிகளின் வாயிலாக நடப்பு ஆண்டில் இவ்வினத்தின் கீழ் செலவுகள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது.

## 10. பொறியியல் பிரிவு

அறிக்கை ஆண்டில் திரு.எ.குருசாமி,அவர்கள் நகராட்சி பொறியாளராக 07.10.2009 வரையும் அதனை தொடர்ந்து **திரு.வி.முருகேசன்** அவர்கள் அறிக்கை ஆண்டின் இறுதி வரை பணிபுரிந்து வந்துள்ளார். மேலும் அவர் கீழ் பின்வரும் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்

| வ.எண். | பதவி | எண்ணி |
|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் (பொதுப்பணி) இரண்டாம் நிலை | 1 |
| 2 | இளநிலை பொறியாளர் (குடிநீர்) இரண்டாம் நிலை | 1 |
| 3 | பணி ஆய்வாளர் | 1 |
| 4 | மீட்டர் ரிடர் | 1 |
| 5 | மின் பணியாளர் நிலை 1 | 2 |
| 6 | மின் பணியாளர் நிலை 11 | 1 |
| 7 | பிட்டர் | 1 |
| 8 | மதகு திறப்பாளர் | 4 |
| 9 | நகர மன்ற தலைவரின் கார் ஓட்டுநர் | 1 |
| 10 | காவலர் | 3 |
| 11 | பவுண்டன கிளினர் | 1 |
| 12 | மின் கம்பியாளர் | 5 |
| 13 | மின் கம்பி உதவியாளர் | 7 |
| 14 | சாலை பணியாளர் | 7 |
| 15 | தோட்டக்காரர் | 12 |

## சாலைகள், பாலங்கள், மற்றும் கட்டிடங்கள்

## 10.1 சாலைகள்

அறிக்கையாண்டு முடிவில் கீழ்க்கண்ட பல்வேறு சாலைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டது

| வ. எண் | சாலைகளின் வகை | 31.3.09–ல் சாலைகளின் நீளம் (கிமீ) | அறிக்கையாண்டில் போடப்பட்ட சாலைகள் (கிலோ மீட்டரில்) | 31.3.2010–ல் சாலைகள் நீளம் |
|---|---|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலைகள் | 40.710 | 1.561 | 42.271 |
| 2 | தார் சாலைகள் | 64.640 | 5.945 | 70.585 |
| 3 | கருங்கல் சாலைகள் | 1.420 | 0 | 1.42 |
| 4 | மண் சாலைகள் | 10.860 | 0 | 10.86 |
| | மொத்தம் | 117.63 | 7.506 | 125.136 |

2009–2010–ம் ஆண்டில் சாலை வேலைகளுக்காக ரூ. 171.69 லட்சம் செலவழிக்கப் பட்டது கடந்த ஆண்டு இத்தலைப்பின் கீழ் ரூ. 361.35 லட்சம் செலவழிக்கப்பட்டது.

நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைகள் யாவும் 3 சாலை பணியாளர்களைக் கொண்டு அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையில் வைக்கப்பட்டது. இந்நகராட்சிக்கு சொந்தமான ஜல்லிகல் தோண்டியெடுக்கும் இடம் இல்லை. நகராட்சி பணிகளுக்குத் தேவைப்படும் ஜல்லிக்கற்கள் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மீனம்பாக்கத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. இந்நகராட்சியின் எல்லைக்குள் நெடுஞ்சாலைத்துறையினரால் கீழ்கண்ட தூசி படியாத சாலைகள் 9.8 மீட்டர் சாலை பராம ரிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | சாலைகளின் பெயர்கள் | சாலையின்நீளம் (கி.மீட்டரில் ) |
|---|---|---|
| 1 | அகரம் தென் பெரும் நெடுஞ்சாலை | 3.80 |
| 2 | வேளச்சேரி சாலை | 3.00 |
| 3 | முடிச்சூர் சாலை | 3.00 |
| | மொத்தம் | 9.80 |

இவற்றுள் தென் பெரும் நெடுஞ்சாலை சிமெண்ட் சாலையாகவும், மற்றவை தார்சாலையாகவும் உள்ளன.

## 10.2 பாலங்கள் தரைப்பாலங்கள்

இந்நகராட்சி பகுதியில் ஒய்வு விடுதிகள், சத்திரங்கள், தோணித்துறை மற்றும் தரைப்பாலங்கள் ஏதும் இல்லை.

## 10.3 கட்டிடங்கள்

இப்பெரு நகராட்சியின் நகரமன்றத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் யாவும் நல்ல முறையில் நகராட்சி நிதி நிலைக்கு ஏற்பபராமரிக்கப்பட்டு வருகிறது. தேவையான பழுது பார்த்தல் வேலைகளும் அவ்வப்போது செய்யப்பட்டது.இந்த நிதியாண்டில் கட்டிடப் பணி புதுப்பித்தல் மற்றும் புதியதாக அமைத்தலுக்கு ரூ.27.24 இலட்சம் செலவினம் செய்யப்பட்டுள்ளது.

## 11. குடிநீர் விநியோகம்

தாம்பரம் நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட பாலாற்றுக் குடிநீர் திட்டம் தாம்பரத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் செங்கற்பட்டு காஞ்சிபுரம் சாலையில் செங்கற்பட்டிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள குடிநீர் ஆதாரமுள்ள வில்லியம்பாக்கம் பாலாற்றுப்படுகையில் தாம்பரம் தலைமை குடிநீர் ஏற்று நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் 47.27 இலட்ச ரூபாய் திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1964ல் துவக்கப்பட்டு 1967ல் வடிவடைக்கப்பட்டு 1996ல் 60,000 மக்கள் தொகை இருக்கும் என எதிர்நோக்கி இத் திட்டம் செயலுக்கு வந்தது. இத் திட்டம் தலைமை நீரேற்று பாலாற்றுப் படுகையில் குடிநிர் ஏற்று விநியோகத்தில் நீர் சேகரிப்பு கிணறு 1ம் ஊடுருவு கிணறு ஒன்றும் வளையக் கிணறு ஒன்று உள்ளது. சேகரிப்பு கிணற்றிலிருந்து 50 குதிரை திறன் கொண்ட ஒரு மோட்டாரும் மாற்று ஏற்பாடாக 30 குதிரைத் திறன் மோட்டாரும் நிறுவப்பட்டது. மேலும் மின்சாரம் தடைப்படும் காலங்களில் 125 கி.வா.மின் ஊக்கி பயன்படுத்தப்பட்டு வந்தது. ஊடுருவு கிணறு 15 குதிரைத் திறன் கொண்டது. அதற்கு மாற்று மோட்டாராக 10 குதிரைத் திறன் மோட்டாரும் பயன்படுத்தப்படுகிறது.

வில்லியம்பாக்கம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 4 கி மீ தூரத்தில் மேலச்சேரியில் 2005–2006–ல் கூடுதல் நீர் ஆதாரத்திற்க்காக குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் 4 எண்கள் ஊடுறுவுக் கிணறும் 1 எண் நீர் சேகரிக்கும் கிணறு அமைக்கப்பட்டு 4 கிணற்றில் 5 எச் பி நீர் மூழ்கி மோட்டாரும் நீர் சேகரிக்கும் கிணற்றில் 20 எச் பி டர்பைன் மோட்டர் பம்ப் 2 எண்கள் பொருத்தி குடிநீர் அனுப்பப்படுகிறது. மேலும் மின் தடை ஏற்படும் நேரங்களில் மின் மோட்டாரை இயக்க 65 கே பி ஏ ஜெனரேட்டர் வைத்து இயக்கப்படுகிறது.

கீழ்க்கண்ட வழிப்போக்கு கிராமங்களுக்குகுடிநீர் விநியோகம் அளிக்கப்படுகிறது.

1. வெங்கட்டாபுரம்,
2. வண்டலூர்
3. வில்லியம்பாக்கம்
4. வெண்பாக்கம்.

இவ்வாண்டில் நாள் ஒன்றுக்கு 36 இலட்சம் குடிநீர் இறைவை செய்யப்பட்டு வழிபோக்கு கிராமங்கள் வழியாக 41.48 கி.மீ.பிரதான விநியோகக் குழாய் மூலம் பெறப்படுகிறது. இதில் கன்வேயிங், மெயினின் மொத்த இறைவை மெயின் 450 எம்.எம்/ சி.ஐ.பைப்பு 24கி.மீ.ஆகும். இக் குடிநீர் 8858 வீட்டுக் குடிநீர்க் குழாய்களுக்கும் 325 இணைப்புகள் வியாபார நோக்கத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் நடப்பு ஆண்டில் 9183 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. பொது குடிநீர் விநியோகக் குழாய்கள் 345 எண்ணிக்கை ஆகும்.

சென்ற ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தாம்பரம் பல்லாவரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் கூடுதல் நீர் ஆதாரத்திற்கு ரூ.333.00 இலட்சத்தில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு தாம்பரம் நகராட்சி பங்கீடாக ரூ.78.62 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு 1.4.2005முதல் மேற்கு தாம்பரம் பகுதியில் உள்ள மேல்நிலைதேக்க தொட்டிகளுக்கு நாள்தோறும் சுமார் 33 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுகிறது. மேலும் நடப்பாண்டில் JNNURM திட்டத்தின் கீழ் மத்திய அரசு மானிய தொகை 35 சதவீதத்தில் 1141.56 லட்சமும் மாநில அரசின் மானியத் தொகை ரூ 489.24 லட்சமும் எம்.ஐ.டி.எப் யில் கடனாக 25 சதவிகித தொகை ரூ 815.40 லட்சமும் பொது மக்களின் பங்கு தொகையாக 1139.56 லட்சமும் மொத்தம் ரூ 3586.92 லட்சம் செலவில் வரும் 30 ஆண்டுகளில் தாம்பரம் மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கு பாலாற்று படுகையில் 13 எண்ணம் ஊடுறுவு கிணறு அமைக்கப்பட்டு அதிலிருந்து பெறப்பட்டும் மேலச்சேரி பாலாற்று படுகை மேல் பகுதி மற்றும் கீழ் பகுதி உள்ளாவூர், பழைய சீவரம் நீர் சேகரிப்பு திட்டம் அமைக்கப்பட்டு அதிலிருந்து நீர் இறைக்கும் மோட்டர் அமைக்கப்பட்டு இதிலிருநது பெறப் படும் குடிநீர் மேலச்சேரி 3 லட்சம் கொள்ளவு உள்ள தரை மட்ட நீர் தேக்க தொட்டி (கலக்சன் சம்ப்) அமைக்கப்பட்டு இதில் 120 எச் பி டர்பன் பம்ப் பொருத்தப்பட்டு அதிலிருந்து சுமார் 13.05 கி மீட்டர் பிரதான குழாய் பைப் லைன் ஓரகடம் பகுதியில் நீர் அழுத்தும் நிறைவு தொட்டி வரை அமைக்கப்பட்டு அதிலிருந்து பெறப்பட்டும் கிரேவிட்டி மெயின் 27.83 கி .மீ. அமைக்கப்பட்டு அதன் மூலம் பெறப்படும் குடிநீரை சேகரம் செய்து விநியோகிக்க தேவநேசன் பூங்காவில் 3 லட்சம் கொள்ளவு கொண்ட கீழ் நிலை நீர்த்தேக்க தொட்டியும், சிடிஓ காலனி பகுதியில் 4 லட்சம் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி ஒன்றும், சினிவாசன் நகர் பகுதியில் 5 லட்சம் கொள்ளவு கொண்ட நீர் தேக்க தொட்டி ஒன்றும், தமிழ் பூங்கா பகுதியில் 6 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்கத்தொட்டி ஒன்றும், சுப்ராயன் பூங்காவில் 10 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டியமைத்து, மேற்படி நீர் தேக்கத்தொட்டிகளில் நாள் ஒன்றுக்கு 7.05 எம்எல்டி நீர் சேகரம் செய்து விநியோகம் செய்ய பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி திட்டத்தில் பெறப்படும் குடிநீரை விநியோகம் செய்ய புதியதாக டி மெயின் பிரதான குழாய்கள் நகர் பகுதியில் மேற்படி திட்டத்திற்கு ஏற்றார் போல் வடிவமைப்பு செய்து குடிநீர் விநியோகம் செய்ய பைப் லைன் பணி அமைக்கும் பொருட்டு சென்னை மற்றும் குடிநீர் வாரியத்தின் மூலம் பணி மேற்க்கொள்ள முதற்கட்ட நடவடிக்கை மேற்க் கொண்டு தற்போது விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது மேற்படி JNNURM திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீரை பொது மக்களுக்கு விநியோகம் செய்ய ஏது வாக 2.08 கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வைப்பு தொகை பணியாக செய்து கொடுக்கத் தொகை வழங்கப்பட்டு தற்போதுள்ள பிரதான பைப் லைன்களில் இணைப்பு செய்யும் (இன்டர் லிங்க்) முதல் கட்டமாக முடிவுற்று இரண்டாம் கட்டமாக கூடுதலாக இன்டர் லிங்க் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இக் குடிநீர் கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படுகிறது.

1.தாம்பரம் மேற்கு பகுதி தாம்பரம் கிழக்குப் பகுதி என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு தாம்பரம் மேற்குப் பகுதியில் முத்துரங்கம் பூங்காவில் 2 நீர்த்தேக்கத் தொட்டியும், 4.00 லட்சம் கொள்ளளவு கொண்ட கீழ்நிலைத் தொட்டியும் 3.64 லட்சம் கொள்ளளவு கொண்ட

மேல்நிலைத் தொட்டியும் கொண்டு 22 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, 5 நாட்களுக்கு ஒரு முறையும், மேலும் மேற்கு பகுதியில் திருநீர்மலை ரோடு சுடுகாடு அருகில் 3.00 லட்சம் கொள்ளளவு மற்றும் முடிச்சூர் ரோடு கோன் கிருஷ்ணா பார்க் 3.00 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திரு.வி.க. நகரில் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும், 4.00 லட்சம் கொள்ளவு கொண்ட கீழ் நிலை நீர்த் தேக்க தொட்டியும், கிருஷ்ணா நகரில் 3 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து முத்துரங்கம் பூங்காவிலிருந்து பெறப்படும் குடிநீர் மேற்படி நீர்த் தேக்க தொட்டி மூலம் விநியோகிக்கப்படுகிறது.

கிழக்கு தாம்பரம் பகுதியில் காந்திப் பூங்காவில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ஒன்றும் தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி ஒன்றும் அமைந்துள்ளன மேலும் திரு வி க நகரில் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளவுக்கொண்ட நீர்தேக்கத் தொட்டியும், காயத்திரி நகர் பகுதியில் 2.00 லட்சம் கொள்ளவுக்கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியும் மற்றும் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்கத்தொட்டியும் அமைத்து 16 மண்டலங்களாகப்பிரிக்கப்பட்டு கிழக்கு தாம்பரத்தில் 27.17 கி.மீ.பிரதானக் குழாய் செல்லும் தூரம் மூலமும், மேற்கு தாம்பரம் 23.63 கி.மீ.தூரம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பாரதி நகர் பூங்காவில் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுக்கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு காந்தி பூங்காவிலிருந்து பெறப்படும் குடிநீரை மேற்படி தொட்டியிலிருந்து அப்பகுதி மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

அறிக்கையாண்டுவரை 10156 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

குடிநீர் கட்டணம் குடியிருப்புகளுக்கு மாதம் ஒன்று ரூ65/– வீதம் ஆறு மாதமாக இணைப்பு ஒன்றுக்கு ரூ.390/– என்றும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.780/–ம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

குடியிருப்பு அல்லாத வர்த்தக நிலையங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாத ஒன்றுக்கு ரூ.100/– வீதம் ஆறு மாதங்களுக்கு ரூ.600/– எனவும் ஆண்டுக்கு ரூ1200/– எனவும் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் புதியதாக வழங்கப்பட உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | குடியிருப்புகளுக்குவைப்புத் தொகை | ரூ 3000/– |
| 2. | தொழிற்சாலைகளுக்குவைப்புத் தொகை | ரூ 25000/– |
| 3 | வியாபார நிறுவனங்களுக்கு | ரூ 6000/– |

நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் நிலைகள் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பொதுக் கிணறுகள் | .. | 53 |
| 2. | ஆழ்துளை கிணறுகள் | .. | 411 |
| 3. | விசைக் குழாய்கள் | . | 23 |
| 4. | பொதுக் குழாய்கள் | .. | 345 |

குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் கீழ்க்கண்ட பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மதகு திறப்பாளர் | 4 |
| 2. | தலைமை நீரேற்று காவலர்கள் | 2 |
| 3. | குழாய் பொருத்துனர் | 1 |
| 4. | மின் பணியாளர் | 2 |
| 5. | மீட்டர் ரீடர் | 1 |

## 12. கிடங்குக்கருவிகளும், தளவாடங்களும்

அலுவலக உபயோகத்திற்காகவும் மற்றும் நகராட்சியின் பிற நிலையங்களின் உபயோகத்திற்காகவும் கருவிகளுக்கும் தளவாடங்களுக்கும் அறிக்கை ஆண்டில் செலவினம் ஏதும் இல்லை.

1. இந்நகராட்சிக்கு சொந்தமான சாலை உருளை கிடையாது
2. பொதுப்பணி வேலைகளுக்காக தனியாக லாரி இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

## 13. தெரு விளக்குகள்

இவ்வாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த மின் விளக்குகளின் எண்ணிக்கை 6267 விவரம் பின்வருமாறு.

| வ.எண். | வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உயர்மின் கோபுர விளக்கு | 1 |
| 2 | குழல் விளக்குகள் 40 வாட்ஸ் | 4600 |
| 3 | சோடியம் ஆவி விளக்குகள் 250 வாட்ஸ் | 952 |
| 4 | 150 வாட் எஸ் வி எல் விளக்கு | 540 |
| 5 | 250 வாட்ஸ் மெட்டல் அலைட்டு விளக்கு | 161 |
| 6 | சிறிய உயர் கோபுர விளக்கு | 13 |
| | மொத்தம் | 6267 |

இந் நகராட்சிக்குட்பட்ட 39 வார்டுகளில் வார்டு எண் 10, 28 முதல் 36 ஆகிய 10 வார்டுகள் வேளச்சேரி மெயின் ரோடு, மற்றும் ஜி எஸ் டி (சென்டர் மீடியன்) அகிய பகுதிகளின் தெருவிளக்குகளை தனியார் மயமாக்கப்பட்டு மெசர்ஸ் டஸ்பன் இன்டஸ்ரிஸ் நிறுவனம் மூலமாக பராமரிக்க ஆண்டு செலவினம்(2009–10 ) ரூ,11,77,280/– செலவிடப்பட்டது. மேலும் மீதம் உள்ள 29 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை 4 மின் கம்பியாளர்கள் மற்றும் 7 மின் கம்பி உதவியாளர் கொண்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்கான மின் உதிரி பொருட்கள் வாங்கிய செலவினத் தொகை ரூ 6,49,150/– நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற் கொள்ளப்பட்டுள்ளது.

## 14. தனியார் கல்வி நிலையங்கள்

தனியார் கல்வி நிலையங்கள் ஏதும் இவ்வாண்டில் இந்நகரமன்றத்தால் நடத்தப்படவில்லை. 1. சென்னை கிருஸ்துவக் கல்லூரி, 2. பாரத் பல்கலைகழகம் 3. சங்கர வித்யாலயா என்ற கல்லூரியும் இந்நகர எல்லைக்குள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 15. பொது நூல் நிலையங்கள்

பொது நூலகங்கள் ஏதும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. உள்ளூர் நூலக அதிகாரக்குழுவின் சார்பாக இரண்டு நூலகங்கள் நடத்தப்பட்டு வருகிது.

## 16. கல்வி

### 16.1ஆரம்பக் கல்வி

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட நகராட்சி ஆரம்ப பள்ளி பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | ஆரம்பப் பள்ளிகளின் விவரம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | சேலையூர் நகராட்சிபள்ளி | 18 |

### 16.2 நடுநிலைக் கல்வி

இந்நகராட்சிப் பகுதியில் கீழ்கண்ட நகராட்சி ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. அவை

| வ.எண். | ஆரம்பப் பள்ளிகளின் விவரம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | பழைய தாம்பரம் நடுநிலைப்பள்ளி | 30 |
| 2 | கன்னடபாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளி | 38 |
| 3 | வினோபா நகர் நடுநிலைப்பள்ளி | 23 |
| 4 | இரும்புலியூர் நடுநிலைப்பள்ளி | 28 |

| வ.எண். | தனியார் நடுநிலைப்பள்ளிகள் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | பேபி நடுநிலைப்பள்ளி | 35 |
| 2 | சி.எஸ்.ஐ. நடுநிலைப்பள்ளி | 33 |
| 3 | ராஜாராம் நடுநிலைப்பள்ளி | 29 |
| 4 | ஔவை நடுநிலைப்பள்ளி | 9 |
| 5 | கிருஸ்து ராஜா நடுநிலைப்பள்ளி(ரயில்வேகுடியிருப்பு) | ------ |

## 16. 3 உயர்நிலை கல்வி

நகர மன்றத்தால் பராமரிக்கப்பட்ட ஒரு உயர்நிலைப்பள்ளி 1.4.1990ம் ஆண்டு முதல் பள்ளிகள் கல்வித் துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் 4 உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன.

| வ.எண். | பள்ளிகளின் விவரம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | அரசுப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி கி.தாம்பரம் | 17 |
| 2 | புனித வளனார் உயர்நிலைப்பள்ளி | 24 |
| 3 | வள்ளுவர் குருகுலம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி | 4 |

## 16.4 மேல்நிலை கல்வி

கீழ்க்கண்ட தனியார் மேல்நிலைப்பள்ளிகள் நகராட்சி எல்லைக்குள் அமையப் பெற்று உள்ளது.

| வ.எண். | மேல்நிலைப்பள்ளிகளின் விவரம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | சென்னை சேவாசதன் மேல்நிலைப்பள்ளி தாம்பரம் | 9 |
| 2 | ஜெயகோபால் கரோடியா தேசிய மேல்நிலைப்பள்ளி கிழக்கு தாம்பரம் | 11 |
| 3 | கார்லி மேல்நிலைப்பள்ளி கி. தாம்பரம் | 24 |
| 4 | கிறித்து ராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி கி. தாம்பரம் | 22 |
| 5 | சியோன் மேல்நிலைப்பள்ளி | 21 |
| 6 | பிரின்ஸ் வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி | 19 |
| 7 | ராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளி | 31 |
| 8 | புனிதமேரி மேல்நிலைப்பள்ளி | 25 |
| 9 | எம்.சி.சி.ஆர்.எஸ்.எல். மேல்நிலைப்பள்ளி | 33 |
| 10 | சீதா தேவி கரோடியா பள்ளி | 15 |
| 11 | சங்கர் வித்யாலயா | 17 |
| 12 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி சேலையூர் | 18 |
| | | |

நகராட்சிப் பள்ளிகளின் நிர்வாகம் கல்வித்துறைக்கு சென்றாலும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு இயங்கி வருகிறது. கல்வி மான்யத் தொகை ஏதுமில்லை. அறிக்கை ஆண்டில் பள்ளிக் கட்டிடப்பணிக்கு ரூ.39.48 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 17. பொது வானொலி

இந்நகராட்சி பூங்காக்களில் வானொலிப்பெட்டி ஏதும் இயங்கப்படவில்லை. அதனால் பராமரிப்பு செலவு ஏதுமில்லை.

## 18. பூங்காக்கள்

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட இடங்களில் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது

| வ.எண். | பூங்காவின் அமைவிடம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | கோன்கிருஷ்ணா ரெட்டியார் பூங்கா | 31 |
| 2 | முத்துரங்கம் பூங்கா | 35 |
| 3 | குமரன் பூங்கா | 18 |
| 4 | காந்தி பூங்கா | 14 |
| 5 | சுப்பராயன் பூங்கா | 22 |

| | | |
|---|---|---|
| 6 | பாரதி பூங்கா | 20 |
| 7 | தமிழ் பூங்கா | 28 |
| 8 | டாக்டர் சந்திரன் தேவநேசன் பூங்கா | 33 |

## 19 பொது நலம்

### 19.1 மருத்துவ வசதி

மூன்று மக்கள் நல்வாழ்வு மையங்கள் மருத்துவர்களின் கீழ் நல்ல முறையில் செயல்படுகிறது. இதில் ஒன்று 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. மகப்பேறு பணியாளர்களும் இதில் சேர்த்து பணியாற்றி வருகிறார்கள். குடும்ப நல அறுவை சிகிச்சைக்கென தனியே அறுவை சிகிச்சை அரங்கம் ஒன்று உள்ளது. இதில் குடும்ப நல அறுவை சிகிச்சைகள் நடப்பாண்டில் நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளது.

### 19.2 மருத்துவமனைகள்

இப் பெரு நகராட்சியின் எல்லைக்குள் 26 தனியார் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகிறது.

### 19.3 நோயாளிகள்

புற நோயாளிகள் மேற்படி மையங்களில் மருத்துவப்பயன்பெற்றுள்ளனர்.

## 20. குடும்ப நலம்

இந்நகராட்சியில் மூன்று சுகாதார மையங்கள் கீழ்க்கண்டப் பணியிடங்களுடன் இயங்கி வருகிறது

| | |
|---|---|
| மருத்துவ அலுவலர் | 3 |
| நலப்பார்வையாளர் | 2 |
| பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் | 12 |
| பெண் உதவியாளர்கள் | 3 |

சுகாதார மையங்கள் மூலம் குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை எடுத்துரைப்பதோடு தாய்சேய் நலப்பணிகளையும் கவனித்து வரப்படுகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகள் மற்றும் இசிவு தடுப்பு ஊசி போடுதல், குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி காசநோய் தடுப்பு ஊசி இளம்பிள்ளைவாதம் மாலைக்கண் நோய் தடுப்பு மருந்துகள் ஆகியவை பல்நோக்கு சுகாதார பார்வையாளர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. மருத்துவ மனையில் புறநோயாளிப்பிரிவை சம்மந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் பராமரித்து வருகின்றனர்.

நகராட்சி மருத்துவமனையில் கீழ்க்கண்ட பணியாளர்களைக் கொண்டு குடும்ப நல அறுவை சிகிச்சையும், மகப்பேறும் கவனிக்கப்பட்டு வருகிறது.

| பதவியின் பெயர் | எண்ணி |
|---|---|
| மருத்துவ அலுவலர் | 1 |
| செவிலியர் | 3 |
| தியேட்டர் உதவியாளர் | 1 |
| வார்டு உதவியாளர் | 1 |
| பெண் உதவியாளர் | 1 |
| ஓட்டுநர் | 1 |
| மகப்பேறு உதவியாளர் | 4 |
| மகப்பேறு ஆயா | 3 |

கம்பர் தெருவில் உள்ள நகராட்சி மருத்துவமனையில் 193 மகப்பேறுகளும் 89 குடும்பநல அறுவை சிகிச்சைகளும் செய்யப்பட்டுள்ளன.

2009–2010 ஆண்டின் குடும்ப நலத் திட்ட சாதனை விவரம்

| வ. எண் | விபரம் | குறியீடு | சாதனை | சதவிகிதம் % |
|---|---|---|---|---|
| 1 | அறுவை சிகிச்சை | 1350 | 1326 | 98 |
| 2 | கருத்தடை வளையம் | 1575 | 1462 | 93 |
| 3 | கருத்தடைமாத்திரை (உட்கொள்வோர்) | 675 | – | 0 |
| 4 | கருத்தடைஉறை(நிரோத்) உபயோகிப்போர் | 1350 | 799 | 59 |

நகராட்சி எல்லைக்குட்பட்ட தகுதிவாய்ந்த தம்பதிகள் சம்பந்தப்பட்டவையாகும்.

## 21.தாய்சேய் நலம்

| வ. எண் | விபரம் | குறியீடு | சாதனை | சதவிகிதம் % |
|---|---|---|---|---|
| 1 | கர்ப்பிணிகள் பதிவு | 3026 | 3025 | 100 |
| 2 | பிரசவங்கள் | 2869 | 2853 | 99 |
| 3 | முத்தடுப்பு ஊசி | 2869 | 2853 | 99 |
| 4 | தட்டம்மை | 2869 | 2853 | 99 |
| 5 | இரண ஜன்னி தடுப்பு ஊசி (10 வருடம்) | 2869 | 2853 | 99 |
| 6 | இரண ஜன்னி தடுப்பு ஊசி (கர்ப்பிணிகள்) | 3026 | 3025 | 100 |

## 22.பிறப்பு விகிதமும், கொள்ளை நோய் மற்றும் ஊறிப்போன நோய்களும்

2009–2010–ம்அறிக்கையாண்டில் 3130 பிறப்புகள் பதிவாகி உள்ளது. அறிக்கை யாண்டில் 964 இறப்புகள் நிகழ்ந்துள்ளவை பதிவாகி உள்ளது. அவற்றில் நோயினால் ஏற்பட்ட மற்றும் இதர நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ எண் | நோய்களின் விபரம் | எண் |
|---|---|---|
| 1 | காலரா | 1 |
| 2 | பெரியம்மை | 0 |
| 3 | சிசுமரணம் | 0 |
| 4 | காய்ச்சல் | 0 |
| 5 | வயிற்றுக் கடுப்பு | 0 |
| 6 | இறந்து பிறத்தல் | 0 |
| 7 | சுவாசப்பை சம்மந்தமான மற்ற வியாதிகள் | 2 |
| 8 | பிற காய்ச்சல் | 0 |
| 9 | வெறி நாய்க்கடி | 0 |
| 10 | மற்ற நோய்கள் | 961 |
| | மொத்தம் | 964 |

## 23. திடக்கிழவு மேலாண்மை திட்டம் ( சுகாதாரப் பணிகள்)

இவ்வாண்டில் 184 பொது சுகாதார துப்புரவு பணியாளர்கள் மூலமாக 5 சுகாதார ஆய்வாளர்களின் கீழ் துப்புரவு மேற்பார்வையாளர்கள் 10 பேர்கள் கண்காணிப்பில் நகரில் குப்பைகளை அகற்றியும் தெருக்கால்வாய்கள் சுத்தப்படுத்தியும் நகர்ப்புறத்தை சுத்தமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. குப்பைகள் கீழ்க்கண்ட வண்டிகள் மூலமாக அகற்றப்பட்டு வருகிறது.

| வ.எண் | வண்டிகளின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டம்பர் பிலேசர் | 4 |
| 2 | மினிலாரி | 3 |
| 3 | காம்பேக்டர் | 3 |
| 4 | சுவாராஜ் மஸ்தா | 0 |

| | | |
|---|---|---|
| 5 | எஸ்சர் லாரி | 5 |
| 6 | கார்கோ லாரி | 1 |
| 7 | எல் அண்டு டி (ஜேசிபி) | 1 |

பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.

| வ.எண் | பணியிடங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர் | 1 |
| 2 | துப்புரவு ஆய்வாளர்கள் | 5 |
| 3 | துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 10 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 184 |
| 5 | யானைக்கால் தடுப்பு பணியாளர்கள் | 10 |
| 6 | டிராக்டர் ஓட்டுநர் | 0 |
| 7 | லாரி ஓட்டுநர்கள் | 10 |
| 8 | களப்பணி உதவியாளர் | 1 |
| | மொத்தம் | 221 |

மேலும் 23.11.05 முதல் மூன்றில் ஒன்று (17 வார்டுகளில்) கிழக்கு தாம்பரம் குப்பை எடுத்து சுத்தம் செய்யும் பணியினை தனியார் மயமாக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கு தாம்பரம் பகுதியில் 10,35 மற்றும் 36 ஆகிய வார்டுகள் மட்டும் தனியார் மயமாக்கப்பட்டு பணிநடைபெறுகிறது.

4.5 ஏக்கர் பரப்பு உள்ள கன்னடபாளையம் என்னும் இடத்தில் குப்பை கிடங்கு உள்ளது. இந்த குப்பை கிடங்கு நகராட்சியின் தற்போதைய தேவைக்கு போதுமானதாக இல்லாததாலும் உரக்கிடங்கின் அருகில் நகராட்சி பள்ளியும், மயானகரையும் உள்ளதால் இதனை விரிவுப்படுத்த இயலவில்லை. மேலும் கிழக்கு தாம்பரத்திலிருந்து குப்பைகளை எடுத்துக்கொண்டு வரும்போது ரயில்வே லைனில் பலமணி நேரங்கள் தாமதப்படுத்தப்படுவதால் கிழக்கு தாம்பரம் பகுதியில் புதிதாக ஒரு உரக்கிடங்கு அமைக்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் கிழக்கு தாம்பரம் பகுதியில் இந்திய விமானப்படை அமைந்துள்ளதால் அதனை சுற்றி 10 கி.மீ. தூரத்திற்கு உரக்கிடங்கு அமைக்க இயலாத நிலை உள்ளது.எனவே திருப்போரூர் சாலையில் உள்ள வேங்கடமங்கலத்தில் ஆலந்தூர் பல்லாவரம் ஆகிய நகராட்சிகளுடன் இணைந்து உரக்கிடங்கு அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.அரசாணை நிலை எண்.178 வருவாய்த்துறை நாள்.6.4.04 சர்வே எண்.16/2ன்படி 50 ஏக்கர் வேங்கடமங்கலம் கிராமத்தில் மேற்படி மூன்று நகராட்சிகளுக்கு சமமாக உரக்கிடங்கு அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. சுற்றுச்சுவர் உள் கட்டமைப்பு பணி நடைப்பெற்று நவீன உரக்கிடங்கு அமைப்பதற்கான பணிநடைபெற்று வருகிறது. மேலும் தற்போது தாம்பரம் நகராட்சி கன்னடபாளையம் குப்பைக் கிடங்கினை Metal Recovery cum Transfer station அமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது

## 24. நகர்புற ஏழை மக்களுக்கானஅடிப்படை வசதிகள் திட்டம்

இந்த திட்டம் ஓராண்டு கால அடிப்படையில் 29.12.2008 அன்று அனுமதிக்கப் பட்டுள்ளது. இந் நகராட்சிக்குட்பட்ட 24 குடிசைப்பகுதிகளிலிருந்து பின்வரும் 13 குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது

1. மௌலானா நகர்
2. ரங்கநாதபுரம்
3. காந்தி நகர்
4. பாரதி நகர்
5. அசோக் நகர்
6. கைலாசபுரம்
7. பழைய தாம்பரம்
8. கன்னடபாளையம்
9 பாரத் நகர்

10 எம் ஜிஆர் நகர்
11 இரும்புலியூர்
12 லட்சுமிபுரம்
13 ராஜீவ் காந்தி நகர்

690 புதிய வீடுகள் கட்டி கொடுப்பது மற்றும் அப்பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு சுமார் 1506.17 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் மானியம் 50 சதவிகிதம் ஆகும். அதாவது ரூ 753.09 லட்சம் மாநில அரசின் மானியம் ரூ 753.08 லட்சமாகும்.

இதில் பின்வரும் வசதிகள் மேற் கொள்ள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

| | | | ரூ லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 690 குடியிருப்புகள் அமைக்க | .. | 897.00 |
| 2. | 9.27 கி மீ தூரத்திற்கு தார் சாலையமைக்க | . | 216.95 |
| 3. | 8.64 கி மீ தூரத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்க | .. | 100.74 |
| 4. | 164 தெரு விளக்குகள் அமைக்க | .. | 14.45 |
| 5. | குடிநீர் பணிக்காக | .. | 18.75 |
| 6. | மாதிரி மார்க்கெட் அமைக்க | .. | 14.45 |
| 7. | சமுதாய நல கூடம் அமைக்க | .. | 76.80 |
| 8. | வாழ்வாதார மையம் அமைக்க | .. | 11.60 |
| 9. | 2032 குடிநீர் இணைப்பு வழங்க | .. | 60.96 |
| 10. | 4246 பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வழங்க | .. | 84.92 |
| | மொத்தம் | .. | 1506.17 |

பணிகளின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | புதிய வீடுகள் அமைத்தல் | .. | 690 |
| 2. | சாலைப் பணிகள் | .. | 24 |
| 3. | குடிநீர் பணிகள் | .. | 16 |
| 4 | மழைநீர் வடிகால் | .. | 14 |

சாலைபணிகள் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நிறைவடைந்தவுடன் துவக்கப் பட உள்ளது. குடிநீர் பணிகள் 16–யில் 4 பணிகள் நிறைவடைந்துள்ளன. மழைநீர் வடிகால் அமைத்தல் பணி 14 யில் 6 பணிகள் நிறைவடைந்துள்ளது.

## 25. தாம்பரம் பாதாள சாக்கடை திட்டம் (Under Ground Drainage Scheme)

தாம்பரம் நகராட்சி 20.72 ச.கீ பரப்பளவு கொண்டாகும். தெருக்களின் மொத்த நீளம் 184 கி.மீ ஆகும். தாம்பரம் நகராட்சிக்காக விரிவான பாதாள சாக்கடைத் திட்டம் 160.97 கோடியில் சென்னைக் குடிநீர் வாரியத்தால் திட்டம் தயாரிக்கப்பட்டு ஜவஉறால்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்ட நிதியின் கீழ் 14.01.2009 அன்று ஒப்புதல் பெறப்பட்டது. சென்னைக் குடிநீர் வாரியத்தால் ரூபாய் 166.22 கோடிக்கு ஆட்சி முறை ஒப்பளிப்பு 20.02.2009 அன்று அளிக்கப்பட்டது. பாதாள சாக்கடைத் திட்டம் மூன்று சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சிப்பம்–1:

கிழக்கு தாம்பரத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டம் சிப்பம்–1 ன் கீழ் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் 85.47 கி.மீ கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணி, 9.26 கி.மீ விசை குழாய்கள் அமைக்கும்பணி, 8 கழிவு நீர் நீரகற்று / தூக்கி கழிவு நீரகற்று நிலையஙள் அமைக்கும் பணி ஆகியவைகளைக் கொண்டதாகும். இப்பணிகள் 11.12.2009 அன்று தொடங்கப்பட்டது. மொத்த ஒப்பந்த தொகை ரூ.48.75 கோடி ஆகும். 30.04.2010 வரை 10.10 கி,மீ நீளத்திற்கு கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி மற்றும் 3 சதவிகிதம் கழிவு நீரகற்று நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிந்துள்ளன. இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 2011 அன்று முடிவுறும்.

சிப்பம்– 2

மேற்கு தாம்பரத்திலுள்ள பாதாள சாக்கடைத் திடடம் சிப்பம்–2 ன் கீழ் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் 90.64 கி.மீ கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி 8.68 கி.மீ விசை குழாய்கள் அமைக்கும் பணி, 11 கழிவு நீரகற்று / தூக்கி கழிவு நீரகற்று நிலையங்கள்

அமைக்கும் பணி ஆகியவைகளைக் கொண்டதாகும். இப்பணிகளுக்கான பணி ஆணை 25.03.2010ல் வழங்கப்பட்டது. மொத்த ஒப்பந்த தொகை ரூ. 56.05 கோடி ஆகும்.

சிப்பம்–3:

கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரத்திற்கான நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் கொள்ளளவு உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி சிப்பம்–3 ன் கீழ் மேற்கொள்ளப்படும் இதற்க்கான ஒப்பந்தங்கள் இம்மாதம் கோரப்படும்.

## 26. ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்.

TNUDP நிதி உதவியுடன் வார்டு எண்கள் 19, 23 மற்றும் 21–ல் தலா ரூ.10 லட்சம் செலவினத்தில் மூன்று சுகாதார வளாகம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.இவைகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 27. உணவு பொருட்கள் கலப்படம்

உணவுக் கடைகள் பல சரக்குக் கடைகள் போன்றவற்றிற்கு உரிமம் வழங்கப்படுகிறது. நிபந்தனைகள் கடுமையாக கடைபிடிக்கப்படுகிறது. உணவு ஆய்வாளர் மூலமாக உணவு கலப்பட மாதிரி எடுக்கப்பட்டு வருகிறது. இத்தலைப்பின் கீழ் ரூ. 0.21 லட்சம் பெறப்பட்டது

## 28. அபாயகரமானதும், அறுவறுக்கத்தக்கதுமான தொழில்கள்

இவ்வாண்டில் 1257 உரிமங்கள் வழங்கப்பட்டு உள்ளன. விதிமுறைகள் கடைப்பிடித்து துப்புரவு மேற்பார்வைக்குப் பின் உரிமங்கள் வழங்கப்படுகிறது. உரிமங்கள் பெறாத தொழில்களுக்கு நோட்டீஸ்கள் வழங்கப்பட்டது. இத்தலைப்பின் கீழ் ரூ. 9.87 லட்சம் பெறப்பட்டது.

## 29. கணிப்பொறி பிரிவு

இந்நகராட்சியில் 1999–2000ம் ஆண்டில் புதிதாக கணிப்பொறி பிரிவு ஒன்று துவக்கப்பட்டது. தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக நகராட்சிப் பணிகளை இந்நகராட்சியில்தான் கணிப்பொறி மயமாக்கப்பட்டது என்பது இந்நகருக்கும் பெருமை சேர்க்கும் பல விஷயங்களில் ஒன்றாகும். இப்பிரிவு உதவி திட்ட அலுவலர் மற்றும் புள்ளி விவர குறிப்பாளர் கொண்டு இயங்குகிறது. இவர்களும் நகராட்சியின் இதர பிரிவு பணியாளர்களும் இணைத்து நகராட்சியின் அனைத்து பணிகளையும் கணிப்பொறியில் மாற்றப்பட்டது. முதற் கட்டமாக நகராட்சியின் பணியாளர்களின் நிர்வாகம் கணிப்பொறிக்கு மாற்றப்பட்டது. அதனை தொடர்ந்து வருவாய் பிரிவின் பணிகளும் பிறப்பு, இறப்பு சம்மந்தப்பட்ட பணிகளும் கணிப்பொறிக்கு மாற்றப்பட்டது. தற்போது நகராட்சியின் கணக்கு பிரிவும் கணிப்பொறியில் பதியப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மின் அளுமையின் மூலம் பெறப்படுகிறது.

## 30. தீயணைப்பு

தாம்பரம் நகரில் தீயணைப்பு பிரிவு இல்லை. இருப்பினும் நகராட்சி எல்லையை ஒட்டியுள்ள சானடோரியம் பகுதியில் தீயணைப்பு பிரிவு உள்ளது. அலுவலகக் கட்டிடத்தில் தீ தடுப்பு முன்னெச்சரிக்கையாக பக்கெட்டில் மணல், தண்ணீர் முதலியனவும் தீத்தடுப்பு சாதனங்களும் வைக்கப்பட்டுள்ளது.

## 31. துப்புரவு பணியாளர்களின் வாழ்க்கை வசதிகள்

துப்புரவு தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரம் அறிக்கையாண்டில் திருப்திகரமாக இருந்தது. தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு வசதி ஏதும் அளிக்கப்படவில்லை. அரசு ஆணைப்படி துப்புரவு தொழிலாளர்களுக்கு ஆண்டு 2 ஜோடி சீருடைகளும் பெண்களுக்கு 2 சேலைகளும் ஜாக்கெட்டுகளும், காலணிகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாதந்தோறும் சோப்பு முதலியனவும் குறித்தக் காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

## 32. கடன்கள்

| வ.எண். | கடன் பெறப்பட்ட நிதி நிறுவனம் | கடன் பெறப்பட்டதற்குரிய விவரம் | 31.3.2010–ல் நிலுவையிலுள்ள கடன்கள் லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | டுபிட்கோ | அடிப்படை வசதிகள் | 88.88 |
| 2. | டுபிட்கோ | மெகாசிட்டி திட்ட பணிகள் | 194.06 |
| 3. | டுபிட்கோ | சிறப்பு சாலைகள் | 83.45 |
| 4. | டிபிசல் | குடிநீர் திட்டப் பணிகள் | 58.24 |
| 5 | டுபிட்கோ | குடிநீர் திட்ட பணிகள் (JNNURM) | 810.50 |
| | | மொத்தம் | 1235.13 |

## 33. போக்குவரத்து வசதிகள்

பல்லவன் போக்குவரத்து கழகம் இந்நகரிலிருந்து சென்னை நகரில் பெரும்பாலான பகுதிகளுக்கு பேருந்துகள் விடப்படுகின்றன. இது தவிர சில தனியார் பேருந்துகள் இந்நகரின் வழியாக சில ஊர்களுக்குச் சென்று வருகிறது. இந்நகராட்சியில் பேருந்துகள் பராமரிக்கப்பட வில்லை.

## 34.பேருந்து நிலையம்

ஒரு பேருந்து நிலையம் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு குத்தகை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ6.12 லட்சம் கிடைக்கப் பெற்றது.

## 34. அ புதிய பேருந்து நிலைய கட்டுமான பணி ( கடப்பேரி)

இந் நகராட்சிக்குட்பட்ட கடப்பேரி கிராமத்தில் ரூ 495 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு (பகுதி –1) பின்வரும் நிதி ஆதார அடிப்படையில் 2007–08–ன் இயக்குதல் மற்றும் நிதி ஆதாரத்தின் கீழ் ரூ 50 லட்சம் மற்றும் இன்பிரா கேப் பில்லிங் பண்டு 2009–10–ன் கீழ் 150 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு எஞ்சிய நிதியினை டுபிசல் நிறுவனத்தின் மூலம் கடன் பெற்றும் மற்றும் 10 சதவிகித நிதியினை பொது நிதியில் மேற்க்கொள்ள திட்டம் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது . அதனை தொடர்ந்து பேருந்து நிலையம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நான்காவது அழைப்பாக 04..05..2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது நகர மன்ற தீர்மானம் எண் 357 நாள் 30.06.2010.–ன் படி ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் மண்டல குழு கூட்ட 09.07..2010–ம் தேதிய முடிவின்படி மெசர்ஸ் பி எஸ் கே என்ஜினியரிங் கன்ஸ்டிரக்சன்ஸ் அன் கோ, நாமக்கல் என்ற நிறுவனத்தின் மூலம் புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணியினை மேற் கொள்ள 12.07.2010 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி துவங்க உள்ளது.

## 35.வண்டி நிலையம்

நகராட்சியால் ஏதும் வண்டி நிலையங்கள் பராமரிக்கப்படவில்லை

## 36.கட்டணக் கழிப்பிடம்

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட இடங்களில் மூன்று இடங்களில் கட்டணக் கழிப்பிடங்கள் உள்ளன. இவ்வாண்டு கட்டணக் கழிப்பிடம் மூலம் நகராட்சிக்கு கிடைத்த தொகை ரூ12.76 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு 11.09 லட்சம் இத்தலைப்பின் கீழ் கிடைக்கப் பெற்றது.

## 37.நகரமைப்பு பிரிவு

நகரமைப்பு பிரிவில் அலுவலராக திரு எம்.ராமசாமி, நகரமைப்பு அலுவலர் தொடர்ந்து அறிக்கை யாண்டு முழுவதும் பணியாற்றி வருகிறார்.

| வ.எண். | பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நகரமைப்பு அலுவலர் (நிலை இரண்டு) | 1 |
| 2. | நகரமைப்பு ஆய்வாளர்கள் | 3 |

| | | |
|---|---|---|
| 3. | உதவி வரைவாளர் | 1 |
| 4. | சங்கிலியாளர் | 1 |

நகரமைப்பு பிரிவு மேற்படி பணியாளர்களைகு கொண்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இயங்கி வருகிறது.

## 38.நகரளவை.

நில அளவை பணி வருவாய் துறையால் நியமிக்கப்பட்டுள்ள நில அளவையர் (உதவி ஆய்வாளர்) மற்றும் சங்கிலியாள் ஒருவர் ஆகியோரால் நில அளவைப் பணி செய்யப்பட்டு வருகிறது.

தாம்பரம் நகரம் சென்னை பெருநகர் பகுதியில் அடங்கியுள்ளது. 19.11.1979ம் தேதிய அரசு ஆணை எண்.2451ல் தாம்பரம் நகர் சேர்க்கப்பட்டது. அறிக்கையாண்டில் பெறப்பட்ட கட்டிட மனுக்களின் விபரமும் முடிவின் தன்மையும்.

| | |
|---|---|
| பெறப்பட்ட கட்டிட மனுக்களின் விபரம். | 698 |
| அனுமதிக்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை | 534 |
| அனுமதிக்கப்படாத வரைபடங்களின் எண்ணிக்கை | 164 |
| அனுமதியில்லாத கட்டிடங்களின் எண்ணிக்கை | 1114 |

அனுமதியில்லா கட்டிடங்களின் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## 39. நகரமைப்பு பிரிவின் கீழ் பெறப்படும் வருவாய்கள்

நகரமைப்பு பிரிவில் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து அறிக்கையாண்டில் வருவாய் கிடைக்கப் பெற்றது.

| வ.எண். | உரிமங்களின் விவரம் | வருவாய் (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கட்டிடங்கள் கட்டுவதற்கான உரிமம் | 106.72 |
| 2. | சாலையமைப்பு கட்டம் | 8.54 |
| 3. | காலிமனை வரி | 66.89 |
| 4. | மனை உட்பிரிவு மனைப்பிரிவு | 0.47 |
| | மொத்தம் | 182.62 |

இந்நகர் சென்னைக்கு அருகாமையில் உள்ளதால் இந்நகர எல்லைக்குள் கீழ்கண்ட காலனிகள் உட்பட பல புதிய காலனிகள் தோன்றியதாலும் அடுக்குமாடி குடியிருப்புகள் கிழக்கு தாம்பரம் பகுதியில் வேகமாக தோன்றி வருவதாலும் மக்கள் தொகை பெருகி வருகிறது. மற்றும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றப்படுகிறது.

இந் பெரு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகளின் விபரம்

| வ.எண் | காலனியின் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | கந்தசாமி காலனி, எல்.ஐ.சி காலனி | 13 |
| 2 | சி.எஸ்.டி.நகர் | 17 |
| 3 | ஈஸ்வரி நகர் | 18 |
| 4 | ராஜேஸ்வரி நகர் கணேஷ்நகர், தனலட்சுமி நகர், மாளவிகா நகர், கணபதி காலனி | 19 |
| 7 | ராஜ்குமார் அவின்யூ | 20 |
| 8 | நடராஜன் நகர், கற்பகம் நகர், லட்சுமி நகர் உமா நகர், சாந்தா நகர் | 21 |
| 11 | திலகவதி நகர், பாலாஜி நகர், காயத்ரி நகர், பொன்னன் நகர், | 27 |

| | | |
|---|---|---|
| | சாந்தி நகர், அருள் நகர் | |
| 12 | டி.டி.கே.நகர் விரிவு, உமா நகர் | 28 |
| 13 | அரசன் நகர், பாண்டியன் நகர்,லட்சுமிபுரம் சி.டி.ஓ.நகர், ஸ்ரீசாய் நகர், ரமணி நகர்,ஸ்ரீராம்நகர்,கிருஷ்ணாநகர், மூகாம்பிகை நகர், வெற்றி நகர், ஜோதிநகர், சென்வேர் நகர், விஷ்ணுநகர், ஸ்ரீராம் நகர் விரிவு, பாரதிதாசன் நகர் | 32 |
| 21 | சிவம் என் கிளேவ் | 33 |
| 22 | தேவசகாயம் நகர், அம்பாள் நகர் | 38 |
| 24 | ரமேஷ்நகர், ராஜீவ்காந்தி நகர் | 39 |

## 40.சிறு சேமிப்பு

2009–2010–ம் ஆண்டில் சிறு சேமிப்பு இலக்கு மற்றும் சாதனை விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | சிறு சேமிப்பு விவரம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிறு சேமிப்பு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அவர்கள் 2009–2010ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு | ரூ300.00 |

## 41.முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டம்

இந் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 6 நகராட்சி பள்ளிகளில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டம் 1.7.1982 முதல் அமுல்படுத்தப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கீழ்க்கண்ட ஆறு பள்ளிகளில் நாள் ஒன்றுக்கு குழந்தைகள் பயன்பெறும் விபரம்.

| வ.எ. | பள்ளியின் பெயர் | 5+9 | 10+14 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | சேலையூர் நகராட்சி மேல் நிலைப் பள்ளி | 0 | 500 | 500 |
| 2. | சேலையூர் நகராட்சி ஆரம்பப் பள்ளி | 300 | 0 | 300 |
| 3. | இரும்புலியூர் நகராட்சிப் பள்ளி | 128 | 72 | 200 |
| 4. | கன்னடபாளையம் நகராட்சிப் பள்ளி | 170 | 90 | 260 |
| 5. | பழைய தாம்பரம் நகராட்சிப் பள்ளி | 58 | 42 | 100 |
| 6. | வினோபாநகர் நகராட்சிப் பள்ளி | 53 | 47 | 100 |
| | மொத்தம் | 709 | 751 | 1460 |

மேலும் இந் நகராட்சியில் 2+4 குழந்தைகளுக்கு 15.9.92 முதல் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதற்கான 19 சத்துணவுக் கூடங்கள் பராமரிக்கப்பட்டு 01.8.1991 முதல் நகராட்சி பொறுப்பிலிருந்து பரங்கிமலை குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது. நகராட்சி பள்ளி சத்துணவு மையங்களில் 5+9 வரம்பில் மற்றும் 10+14 வயது 1550 மாணவ மாணவிகள் சத்துணவு உட்கொண்டு வருகிறார்கள்.

## 42. பள்ளி சத்துணவு மையங்கள்

| வ.எண். | பள்ளியின் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | சேலையூர் நகராட்சி மேல்நிலைப் பள்ளி | 18 |
| 2. | சேலையூர் நகராட்சி ஆரம்பப் பள்ளி | 18 |
| 3. | இரும்புலியூர் நகராட்சி நடு நிலைப் பள்ளி | 28 |
| 4. | கன்னடபாளையம் நகராட்சி நடு நிலைப் பள்ளி | 30 |
| 5. | பழைய தாம்பரம் நகராட்சி நடு நிலைப் பள்ளி | 38 |
| 6. | வினோபாநகர் நகராட்சி நடு நிலைப் பள்ளி | 23 |

குறிப்பு.சேலையூர் உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டிடம் கட்டப்படவில்லை. இருப்பினும் சேலையூர் உயர்நிலைப் பள்ளியில் உணவு வழங்கப்பட்டு வருகின்றது. கட்டிடம் கட்ட மான்யம் கோரி அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. 5+9 மற்றும் 10+14 குழந்தைகள் சத்துணவுப் பணியை ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் கவனித்து வருகின்றனர்.

இத்திட்ட பராமரிப்பு செலவு முழுவதும் அரசாங்கத்திடமிருந்து மான்யமாக பெறப் படுகிறது.

## 43. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் 2009–2010–ம் ஆண்டில் 204 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ 6000/– வீதம் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. 2009–2010–ல் 285 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவித் தொகை தலா ரூ6000/– வழங்கப்பட்டுள்ளது.

## 44. மகளீர் சுய உதவி குழுக்கள்

இந் நகராட்சி பகுதியில் 425 சுய உதவி குழுக்கள் அமைந்துள்ளன. மேற்படி சுய உதவிக்குழுக்களை இந் நகராட்சியின் சார்பாக 2 சமுதாய அமைப்பாளர்களைக் கொண்டு மேற்பார்வையிடப்படுகிறது. சுய உதவிகுழுவின் மூலம் அப்பகுதி மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்து பொருளாதார ரீதியாகவும், சமுக நீதியாகவும் தன்னிறைவு அடைவதில் அப்பகுதி மகளீர்களுக்கு பேருதவியாக உள்ளனர். மேற்படி சுய உதவி குழுக்களுக்கு வங்கிகள் நேரடி கடன் மற்றும் மானிய கடன் பெற நகராட்சி மூலம் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 9.20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி தொகை வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 28 குழுக்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது.

## 45. வருவாய் பிரிவு

இப்பெருநகராட்சியின் வருவாய் பிரிவு அலுவலராக திரு.வி.மணி, வருவாய் அலுவலராக 31.01.2010 வரையும், திருமதி **கு. இந்திரா** அவர்கள் 17.03.2010 முதல் அறிக்கையாண்டு முழுவதும் பணியாற்றி உள்ளார்கள். திரு. பெ. அழகர்சாமி, வருவாய் ஆய்வாளராக 17.08.2009 முற்பகல் வரையும் 17.08.2009 முற்பகல் முதல் 24.09.2009 பிற்பகல் வரை திரு எப்.முகமது அஜிஸ்சுதின் என்பவரும் 01.10.2009 முதல் அறிக்கையாண்டின் நிறைவு வரை **திரு.வி.ஜான்பாண்டியராஜ்** அவர்களும் வருவாய் ஆய்வாளர்களாக பணியாற்றி வருகிறார்கள்.

வருவாய் பிரிவு பின்வரும் பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

| வ.எ. | பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வருவாய் அலுவலர் | 1 |
| 2. | வருவாய் ஆய்வாளர் | 1 |
| 3. | வருவாய் உதவியாளர்கள் | 8 |
| 4 | பேருந்து நிலைய காவலர் | 1 |
| 5 | மார்க்கெட் காவலர் | காலியாக உள்ளது |

இப் பிரிவில் மேலும் உதவியாளர் ஒருவர் மற்றும் இளநிலை உதவியாளர்கள் இருவர் வருவாய் பிரிவு பணியினை கவனிக்கின்றனர்.

## 46 ஆண்டு குத்தகை இனங்கள் 2009–2010

| வ.எண் | விவரம் | தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | துரைசாமி மார்கட் கடைகள் 26 | 5.00 |
| 2 | பர்மா கடைகள் 10 | 0.76 |
| 3 | பாரதமாதா தெரு கடைகள் 6 | 0.62 |
| 4 | முத்துலிங்கம் தெரு கடைகள் 5 | 0.91 |

| | | |
|---|---|---|
| 5 | சண்முகம் ரோடு கடைகள் 17 | 4.92 |
| 6 | அப்துல் ரசாக் தெரு டீசல் பங்க் 7 | 0.37 |
| 7 | பேருந்து நிலைய சிறு கடைகள் 2 | 0.09 |
| 8 | சண்முகம் ரோடு கடைகள் 11 | 2.83 |
| 9 | ஜீவா வணிக வளாக கடைகள் 26 | 4.28 |
| 10 | பேருந்து நிலைய உணவு விடுதி கடை 1 | 10.50 |
| 11 | சண்முகம் ரோடு கடைகள் 22 | 10.10 |
| 12 | துரைசாமி மார்கட் (ஆடு,கோழி, இறைச்சி கடை) 15 | 2.22 |
| 13 | ஜீவா வணிக வளாகம் படைவீரர் அலுவலகம் | 1.50 |
| 14 | ஜீவா வணிக வளாகம் மாவட்ட நீதிமன்றம் | 1.83 |
| 15 | மண்டல சேமநல நிதி அலுவலகம் மூலம் | 22.74 |
| 16 | துரைசாமி மார்கட் 172 மனைகள் | 2.76 |
| 17 | துரைசாமி மார்கட் 18 மனைகள் | 0.80 |
| 18 | டெலிபோன் பூத் | 0.08 |
| 19 | ஆப்டிக் பைபர் கேபிள் | 0.48 |
| 20 | சண்முகம் சாலை பெரிய கடைகள் | 0.47 |

அறிக்கையாண்டில் ஆண்டு வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் 27% சொத்துவரி விதிப்பு கீழ்க்கண்ட சதவிகித அடிப்படையில் விதிக்கப்படுகிறது.

| வ.எ. | விபரம் | சதவிகிதம் |
|---|---|---|
| 1. | பொது காரியத்திற்காக | 52 |
| 2. | குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி | 22 |
| 3. | கல்வி வரி | 19 |
| 4. | நூலக வரி | 7 |

காலி இடத்தின் சொத்துவரியானது காலி இடத்தின் மதிப்பீட்டின் சதுர அடி அடிப்படையில் கீழ்க்கண்டவாறு விதிக்கப்பட்டது.

| வ.எண். | விபரம் | சதவிகிதம் |
|---|---|---|
| 1. | பொது காரியத்திற்காக | சந்தை விலை மதிப்பீட்டில் 13 அரையாண்டுகளுக்கு மிகாயகமல் |
| 2. | நூலக வரி | இதில் 10 சதவிகிதம் |

## 46,1 தொழில்வரி

12.1.1998ம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.11–ன்படி 01.10.1998 முதல் நகராட்சி எல்லைக்குட்பட்ட வர்த்தகம் தொழில் நிறுவனங்களிடமிருந்து மற்றும் அரசு மற்றும் அரசினை சார்ந்த நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர் களிடமிருந்து கீழ்க்கண்ட விகிதத்தில் அரையாண்டுக்கு ஒரு முறை தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| மொத்த ஊதியம் | | அரையாண்டிற்கு பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொழில்வரி ரூபாய் |
|---|---|---|
| முதல் | வரை | |
| 1 | 21000 | இல்லை |
| 21001 | 30000 | 95 |
| 30001 | 45000 | 240 |
| 45001 | 60000 | 470 |
| 60001 | 75000 | 710 |
| 75001 | அதற்கு மேல் | 950 |

## 46.2 கேட்பு வசூல் மற்றும் நிலுவை விபரம் வழக்கில் இருக்கும் தொகை உட்பட

| இனம் | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொ | நிலுவை | நடப்பு | மொ | நிலுவை | நடப்பு | மொ |
| வரி | 1318.82 | 985.88 | 2304.7 | 428.58 | 745.96 | 1174.54 | 590.24 | 239.92 | 1130.16 |
| வரியில்ல | 24.24 | 95.20 | 119.44 | 8.45 | 81.28 | 89.73 | 15.79 | 13.92 | 29.71 |

## 47. தணிக்கைகள்

ஆண்டு தொடக்கத்தில் 1443 தணிக்கைத் தடைகள் நிலுவையாக இருந்தது ஆண்டு இறுதியில் 1227 தணிக்கைத் தடைகள் உள்ளது.

| வ.எ | விபரம் | கல்வி நிதி | பொது நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 1996–1997 –ம் வரையானது | 15 | 210 | 225 |
| 2. | 1997–1998 | 5 | 93 | 98 |
| 3. | 1998–1999 | 5 | 28 | 33 |
| 4. | 1999–2000 | 7 | 53 | 60 |
| 5. | 2000–2001 | 8 | 68 | 76 |
| 6 | 2001–2002 | 6 | 74 | 80 |
| 7 | 2002–2003 | 12 | 86 | 98 |
| 8 | 2003–2004 | 11 | 142 | 153 |
| 9 | 2004–2005 | 13 | 132 | 145 |
| 10 | 2005–06 2006–07 | 12 | 247 | 259 |
| | | 94 | 1133 | 1227 |

## 48. தொடங்கப்பட்ட நிலுவை வருவாய் மற்றும் செலவு எல்லா கணக்குகளின் கீழ் பின்வருமாறு.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விபரம் | தொடக்க இருப்பு | வரவு | செலவு | முடிக்கப்பட்டவை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது கணக்கு | 1934.64 | 1917.05 | 1890.23 | 1961.46 |
| 2 | ஆரம்ப கல்வி | 193..38 | 124.48 | 31.75 | 286.11 |
| 3 | குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 273.35 | 256.47 | 368.56 | 161.26 |

## 49. மூலதன செலவுகள்

கட்டிடங்கள் கட்டுவதற்கும் தூசியில்லா சாலை அமைக்கவும் அறிக்கை ஆண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டில் மொத்தம் இருப்பு ரூ.1961.46 இலட்சம் ஆகும்.

## 50. பொது குறிப்புகள்

இந் நகராட்சி இவ்வாண்டில் தனது வரம்புக்குட்பட்ட நிதி நிலைமைக்கு ஏற்ப மக்களுக்கு தேவையான நகர வசதிகளை செய்துள்ளது.

நகரத்தினை சுத்தமாக பராமரிக்கவும், தெருக்கள் மற்றும் விளக்குகள் பராமரிப்பதில் முழுமையான கவனம் செலுத்தப்படுகிறது.

**ஆணையாளர்,**
**தாம்பரம் பெரு நகராட்சி**

# தாம்பரம் பெரு நகராட்சி

# 2009–2010

# நிர்வாக ஆட்சி அறிக்கை